**O.S.126 of 2024**

Date : 07.03.2026.

வா.சா.1 : பெருமாள் நாடார்

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

பிரதிவாதி லெட்சுமணன் என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு 5 பெண்பிள்ளைகளும் 2 ஆண்பிள்ளைகளும் குழந்தைகள் ஆவார். அதில் 2 ஆண்பிள்ளைகள் நானும் பிரதிவாதியும் ஆவோம். ஒரு சகோதரியான ஆறுமுக கனி என்பவர் திருமணம் ஆகாமல் 7 வயதில் இறந்துவிட்டார். மற்ற 4 பெண் பிள்ளைகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அதில் ஒரு சகோதரி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் பெயர் லெட்சுமி ஆகும். என் அப்பா தாத்தா அனைவருக்கும் விவசாயம்தான் தொழில் என்றால் சரிதான். எனக்கும் விவசாயம்தான் தொழில் என்றால் சரிதான். நான் பலசரக்கு கடையும் வைத்திருந்தேன். தற்போது வைக்கவில்லை. 20 வருடங்களுக்கு முன்பு வைத்திருந்தேன். என்னுடைய அப்பா தாத்தாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட விவசாய இடங்கள் மேலமலையநேரி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் நான் தாத்தா காலத்தில் இருந்தே விவசாம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் எனக்கு 5 அல்லது 7 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார். என்னுடைய தம்பி பிரதிவாதி என்னை விட 3 வயது இளையவர் ஆவார். அவர் சின்ன வயதில் குடும்ப சூழ்நிலை காரணமாக மும்பை போய்விட்டார். அதற்கு முன்பு என்னுடை பனை மரம் ஏறும் தொழில் செய்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார். என் தம்பி மும்பை செல்லும் போது அவருக்கு வயது என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. அவர் 8ம் வகுப்பு வரை படித்திருந்தார். படித்துவிட்டு உடனே சென்று விட்டாரா என்றால் சிறிது வருடம் கழித்து சென்றார். சுமார் 5 வருடங்கள் கழித்து சென்றிருப்பா என்றால் எந்த வருடம் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. என்னுடைய சகோதரிகளுக்கு நானும் பிரதிவாதியான எனது தம்பியும் குடும்ப நிலத்தில் விவசாயம் பார்த்து திருமணம் முடித்து கொடுத்தோம் என்றால் சரிதான். மூத்த சகோதரிக்கு என் அப்பா இருக்கும்போதே திருமணம் நடைபெற்றுவிட்டது. 1972 ம் ஆண்டு மேல மலையநேரி கிராமத்தில் சர்வே எண்.1/2B 1 ல் செண்டு 29 நிலமும், 2/1 ல் செண்டு 14 நிலமும் நானும் எனது

தம்பியும் பனையேறி கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு விலைக்கு வாங்கினோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்கூறிய 09.08.1972 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ-1** ஆகும். கிரைய சமயத்தில் பிரதிவாதி மைனராக இருந்ததால் அவருக்காகவும் சேர்த்து நான்தான் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கும் என் தம்பிக்கும் சேர்த்து கிரையம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனக்கும் குடும்ப நிலத்தைபொறுத்தும் எங்களுக்குள் பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை கிடையாது என்றால் சரிதான். வாய்மொழியாக பங்கு வைத்துக்கொண்டோம். 1984 ம் வருடம் எங்கள் குடும்பத்திற்குள் வாய் மொழி பாகம் ஏற்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழி பாகம் ஏற்பட்டு 20 வருடங்கள் இருக்கும் . வாய் மொழி பாகம் யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் ஊரில் பெரியாட்கள் 2, 3 பேர் இருந்தார்கள். எங்கள் ஊர் பெரியாட்கள் தங்க பாண்டி சாமுவேல் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பத்திர எழுத்தர் பால சுப்பிரமணியனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரை சார்ந்த C. சுடலை முத்து நாடார், P. ஆறுமுக நாடார் ஆகியோர்களை எனக்கு தெரியும். தங்கபாண்டி, சுடலை முத்து, சாமுவேல் நாடார், ஆறுமுக நாடார் ஆகியோர்கள் உயிருடன் இருக்கின்றனரா என்றால் சுடலை முத்துவும், ஆறுமுக நாடார் மற்றும் சாமுவேல் நாடார் ஆகியோர் உயிருடன் இல்லை. தங்கபாண்டி இருக்கிறாரா என்று சந்தேகமாக உள்ளது. தங்கபாண்டி இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான்குபேருக்கும் என் மீது விரோதம் உண்டா என்றால் மூன்று பேருக்கு என் மீது விரோதம் உண்டு. நான் விரோதம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் சகோதரருக்கும் வழக்கு சொத்து உட்பட குடும்ப சொத்துக்களை பொறுத்து 06.10. 1984 ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்படாத ஒரு பாகதஸ்தாவேஜ் ஏற்படுத்தப்பட்டது என்றால் இல்லை. வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டது. மேற்கண்ட சொத்துக்களை பொறுத்து வாய் மொழி பாகம் யார் முன்னிலையில் ஏற்பட்டது என்றால் இசக்கி முத்து முன்னிலையில் ஏற்பட்டது. பழைய சொத்துக்களை பிரித்துக்கொண்டோம். எனக்கும் பிரதிவாதிக்கும் பூர்விகமாக பாத்தியப்பட்ட வீட்டை பொறுத்து 14.06.1987 ல் ஒரு பாகம் செய்து கொண்டோமா என்றால் சரிதான். அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் நான் வாதியாக இருந்து அருணாச்சல தேவர், சண்முக சுந்தர தேவர் மற்றும் இந்த வழக்கின் பிரதிவாதி லெட்சுமணன் ஆகியோர்களை

பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து மேல மலையநேரி கிராமம் சர்வே எண்.17/1 ல் ஏக்கர் 1 செண்டு 55 நிலத்தை பொறுத்து ஒரு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை தாக்கல் செய்த காலத்தில் பிரதிவாதி மும்பையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அதனால் அவருக்காகவும் சேர்த்து நான்தான் மேற்படி வழக்கை நடத்தி கொண்டு வந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு OS 817/1987 என்றால் அவ்வாறு என்றுதான் நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை. அவ்வழக்கில் எனக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் சொத்தில் உரிமை உள்ளது என்று 15.06.1987 ல் தீர்ப்பானது என்றால் சரிதான். என் சகோதரர் மும்பையை விட்டுவிட்டு 5 வருடத்திற்கு முன்புதான் திரும்பி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மும்பையில் இருந்து குடும்ப விழாக்களுக்கு வருவார் என்றால் சில இடங்களில் வருவார். எனக்கு தொடர்பு இல்லை. எனக்கும் என் சகோதரருக்கும் எப்போது இருந்து பேச்சு இல்லை என்றால் என் அம்மா 2000 ம் வருடத்திற்கு முன்பு இறந்த போது தந்தி அடித்தேன். ஆனால் அவர் இறப்புக்கு கூட வராததால் அவரிடம் பேச்சு இல்லை. என் அம்மா இறப்பில் அவர் கலந்து கொண்டு ஈமச்சடங்கு நடத்தினார் என்றால் சரியல்ல. அவர் வரவில்லை. தற்போது வரை எனக்கும் அவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை. நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஏதாவது சொத்து விற்றோமா என்றால் விற்றோம். எனது தாத்தா பெயரில் உள்ள பூர்வீக இடம் எனது பெயரில் தவறுதலாக ஏற்பட்டதால் அதை நான் விற்று பாதி பாதியாக பணம் எடுத்துக்கொண்டோம். 19.01.2023 ல் கிறிஸ்டோபர் மகன் ஜோசப் என்பவருக்கு ரூ.1,65,000 க்கு கிரையம் கொடுத்தேன். அந்த சொத்து வழக்கு சொத்தின் அருகில் இருக்கிறது என்றால் சரியல்ல. இரண்டு பர்லாங்கு தூரம் இருக்கும். வழக்கு சொத்தை பொறுத்து 40 வருடங்களுக்கு முன்பே பட்டா இருந்து வருகிறது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு நடக்க கூடிய சொத்து விவசாயம் நடக்க கூடிய இடம் என்றால் புஞ்சை நிலம் ஆகும். வீட்டுமனை அல்ல. வழக்கு நடக்கும் இடத்தின் புல எண் என்ன என்றால் 16/10, 17/2 ஆகும். வழக்கு சொத்து என் தாத்தாவிற்கு மற்றும் என் அப்பாவிற்கு சொந்தமான பூர்வீக நிலத்தின் அருகில் இருக்கிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 17.07.2020 ம் தேதியிட்ட செங்களாகுறிச்சி கிராம நிர்வாக அலுவலர் சர்வே எண்.16/10 ஐ பொறுத்து வழங்கிய கிராம அடங்கல் கணக்கு என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காட்டப்படும் 24.09.2022 ம் தேதியிட்ட செங்களாகுறிச்சி கிராம நிர்வாக அலுவலர் சர்வே எண்.16/10 ஐ பொறுத்து வழங்கிய கிராம அடங்கல் கணக்கு

என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.3** ஆகும். குடும்ப சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை செய்ய கோரி பிரதிவாதி என்னிடம் கேட்டாரா என்றால் சரிதான். ஆனால் நான் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.817/1981 நடந்து கொண்டிருந்ததால் நான் பாகபிரிவினை செய்து கொடுக்கவில்லை. அந்த வழக்கு ஒரு சர்வே எண்ணை பொறுத்துதான் என்றால் சரிதான். மற்ற சர்வே எண்ணை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை செய்ய எந்தவித சட்ட தடையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கூறும் வழக்கு 1987 லேயே முடிந்துவிட்டது என்பதால் அதற்கு பிறகு எழுத்து மூலமான பதிவு செய்யப்பட்ட பாகம் செய்வதற்கு ஏற்பாடு செய்தேனா என்றால் இல்லை. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எனக்கும் பிரதிவாதிக்கும் பாகபிரிவினை செய்யவில்லை. ஆனால் அவரவர் வசதிக்கு ஒவ்வொரு இடத்தையும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).